Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ். நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 27 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 13 (10.06.2006) சனிக்கிழமை இதழ் 252

# ஒஸ்லோ மாநாடு தோல்வி இந்தியா ஆழ்ந்த கவலை

கொழும்பு —

ஒஸ்லோ மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் நேரடியாக சந்திக்காமை குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொள்வதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டம் தோல்வியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு அறிக்கை இலங்கை அரசு கண்டனம்!


கொழும்பு —

ஜெனிவாவில் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கடந்த 4 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை குறித்து இலங்கை அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜெனிவாப் பேச்சுக்கள் தொடர்பாக கடந்த 4ஆம் திகதி இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வங்காலையில் கோரமாக கொலை!





மன்னார் —

மன்னார் - வங்காலையில் இரு சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

வங்காலையின் தோமஸ்புரியின் எல்லைப்பகுதியிலுள்ள வீட்டில் வசித்து வந்த மூர்த்தி மார்ட்டின் (வயது 35), அவரது மனைவி மேரி மெடலின் என்ற சித்ரா (வயது 27), மகள் ஆன் லூக்சியா (வயது 9), மகன் ஆன் நிலக்சன் (வயது 7) ஆகியோரே நேற்று முன்தினம் இரவு படுகொலை செய்யப்பட்டனர்.

கொல்லப்பட்ட சித்ராவின் சகோதரி நேற்றுக் காலை 7 மணியளவில் மார்ட்டின் வீட்டில் ஒருவரையும் காணவில்லை என்று பார்ப்பதற்கு சென்றபோது -

அங்கு எவ்வித நடமாட்டமும் இல்லாத நிலையில் வீட்டுக்கதவை உறவினர்கள் துணையுடன் உடைத்து உள்நுழைந்தபோது வீட்டினுள் சித்ரா நிலத்தில் கழுத்து வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டார்.

வீட்டினுள்ளே மார்ட்டினும் அவரது பிள்ளைகளும் தூக்கில் தொங்க விடப்பட்ட நிலையில் காணப்பட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அனுசரணை பணியிலிருந்து விலக நோர்வே அரசாங்கம் ஆலோசனை!

ஒஸ்லோ —

ஒஸ்லோவில் இலங்கை அரசாங்கத்தையும், புலிகளையும் சந்திக்க வைப்பதில் தோல்விகண்ட நோர்வே அரசு - அனுசரணைப் பணியிலிருந்து விலகுவது தொடர்பாக ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை உறுதிப்படுத் தும் வகையில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் சமாதான முயற்சியில் நோர்வே அனுசரணைக்கான இடம் என்பது தற்போது இல்லை

# அரசின் வெளியேற்றம்; புலிகள் கடும் கண்டனம்

கிளிநொச்சி —

# அனுசரணை பணியிலிருந்து விலக நோர்வே அரசாங்கம் ஆலோசனை!

ஒஸ்லோ —

ஒஸ்லோவில் இலங்கை அரசாங்கத்தையும், புலிகளையும் சந்திக்க வைப்பதில் தோல்விகண்ட நோர்வே அரசு - அனுசரணைப் பணியிலிருந்து விலகுவது தொடர்பாக ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை உறுதிப்படுத் தும் வகையில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் சமாதான முயற்சியில் நோர்வே அனுசரணைக்கான இடம் என்பது தற்போது இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஏ.எப்.பிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது -

ஒஸ்லோ மாநாட்டில் புலிகள் இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர் என்பதில் சந்தேகமில்லை.

சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து புலிகள் கடும் நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஐரோப்பிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் வெளியேற்றம்; புலிகள் கடும் கண்டனம்



கிளிநொச்சி —

நோர்வே அனுசரணையாளர்களுடன், பேச்சுக்களை நடத்தாமல் ஒஸ்லோவில் இருந்து இலங்கை அரசாங்கத் தரப்பு வெளியேறியமை அத்துமீறலானது என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் குற்றம்சாட்டியுள்ளார்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நேற்று நோர்வே நேரம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாவது -

இலங்கை அரசாங்கத்தை (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு பிரதி செயலராக அட்மிரல் சந்தகிரி!



கொழும்பு —

கூட்டுப்படைகளின் தளபதியாகவிருந்த அட்மிரல் தயா சந்தகிரி நேற்றுக்காலை பாதுகாப்பு அமைச்சின் பிரதிச்செயலாளராக பதவியேற்றார்.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற இந்த பதவியேற்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு இரு தரப்புக்கும் நோர்வே அரசு கடிதம்

ஒஸ்லோ —

போர்நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் மதிக்கின்றனவா என்பதை தமக்கு அறியத் தருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோரை நோர்வே அரசாங்கம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழலுக்கு மத்தியில் அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கிடையில் சந்திப்பை ஏற்படுத்த முடியாமற் போனமை தொடர்பாக நோர்வே அரசாங்கம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான நேரடிப்பேச்சு சாத்தியப்படாத நிலையில் ஐந்து முக்கியமான விடயங்களுக்கு பதிலளிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும், விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமும் நோர்வே அரசாங்கம் கடிதங்கள் மூலம் கேட்டுள்ளது.

இதில் முதலாவதாக - 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை இரண்டு தரப்பினரும் மதிக்கின்றார்களா என்பதை அறியத்தரவேண்டும்.

இரண்டாவதாக- நோர்வே அரசாங்கத்தின் தலைமையிலான போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகள் தொடர வேண்டுமா என்பதற்கு பதிலளிக்க வேண்டும்.

மூன்றாவதாக - போர்நிறுத்த உடன்படிக்கையின் 3 ஆம் பிரிவின் 9 ஆவது சரத்தில் விதந்துரைக்கப் பட்டதற்கமைய இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவி[illegible]ர் அனைவரது பாதுகாப்புக்கும் இரண்டு தரப்பினராலும் உத்தரவாதம் வழங்கமுடியுமா?


நான்காவதாக - இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் தற்போதைய செயற்பாடுகளுக்கு ஏதுவாக போர்நிறுத்த உடன்படிக்கையின் 3 ஆம் பிரிவின் 5 ஆவது ஷரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைத் திருத்தியமைப்பதற்கு இரண்டு தரப்பினரும் இணக்கம் தெரிவிப்பார்களா?

இறுதியாக இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படின் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் தற்போது அங்கம் வகிப்பவர்களது பாதுகாப்புக்கு இரண்டு தரப்பினரும் முழுமையான உத்தரவாதத்தை வழங்குவார்களா?

(10 ஆம் பக்கம் பார்க்க)




# உலகக்கிண்ண உதைபந்தாட்டம் மியூனிச்சில் கோலாகல ஆரம்பம்



மியூனிச்

உலகெங்கும் உள்ள உதைபந்தாட்ட ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 2006 நேற்று ஜேர்மனியில் கோலாகலமாக ஆரம்ப மானது.

18 ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் 32 அணிகள் பலப்பரிட்சையில் இறங்கவுள்ளன.

ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவில் அனைத்து நாடுகளும் வரிசையாக அணிவகுத்து வரும்.

பின்னர் கலைநிகழ்ச்சிகள் என விழா குறைந்தது மூன்றரை மணிநேரம் நடைபெறும். ஆனால், நேற்றைய தொடக்க விழா ஒரு மணி நேரம்தான் நிகழ்ந்தது.

நேற்று இரவு இலங்கை நேரம் 8.30 மணியளவில் மியூனிச் அரங்கில் தொடக்க நிகழ்வு நடைபெற்றது. இதில் பாரம்பரிய பவேரியின் இசை முழங்க பறக்கும் பெண் தோன்றினாள். இவரை அரங்கின் கூரைப் பகுதிவரை கொண்டு சென்றனர். பின்னர் ஆடல், பாடல்களுடன் நிகழ்ச்சிகள் களைகட்டியது. கிராமி விருது பெற்ற டோனி பிராக்ஸ்டன் மற்றும் பொப் ஒபேரா குழுவினர் தற்போதைய உலகக் கிண்ணத் தொடரின் பாடலைப் பாடினர்.

120 டிரம்ஸ் கலைஞர்கள் இசைக்க, முன்னாள் உலகக்கிண்ண சம்பியன் வீரர்களான பீலே, மரடோனா உள்ளிட்ட 170 பேர் அணி வகுத்து வந்தனர். இதில் 1974 இல் மேற்கு ஜேர்மனி அணிக்கு கோப்பை பெற்றுத் தந்த 22 வீரர்களும் இடம்பெற்றிருந்தனர்.


பின்னர் தங்கக் கிண்ணத்தை பிரேசில் ஜாம்பவான் பீலே ஏந்தி வந்தார். தொடக்க விழாவில் முன்னாள் வீரர்கள் பங்கேற்றது உலகக்கிண்ண வரலாற்றில் இதுவே முதன்முறை. தீவிரவாதிகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்க பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொடக்க விழா நிகழ்ச்சியில் ஜேர்மனி அதிபர் ஹர்ஸ்ட் கோலர் மட்டும் உரைநிகழ்த்தினார். விழாவில் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு தலைவரு செப் பிளாட்டர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தொடக்க விழா நிகழ்விவை உல்கெங்கும் உள்ள 150 கோடி பேர் பார்த்து ரசித்ததுடன், முதல் போட்டியை மியூனிச் நகரில் உள்ள அரங்கில் 66 ஆயிரம் ரசிகர்கள் பார்த்து ரசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கோஸ்டாறிக்காவைத் தோற்கடித்த ஜேர்மனி அணிக்கு முதல் வெற்றி!



மியூனிச்

ஜேர்மனியின் மியூனிச் நகரில் நேற்று ஆரம்பமான உலகக்கிண்ண உதைபந்தாட்ட திருவிழாவின் முதல் போட்டியில் 4:2 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனி அணி அபார வெற்றிபெற்றது.



இலங்கை நேரப்படி 9.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் போட்டியில் ஜேர்மனி அணியை எதிர்த்து கோஸ்டாறிக்கா அணி மோதியது. 66 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்த அரங்கத்தில் ஆரம்பமான இந்தப் போட்டியின் முதலாவது கோலை ஜேர்மனி அணியின் பிலிப் லாம் அடித்தார்.

போட்டி தொடங்கி 6ஆவது நிமிடத்தில் போடப்பட்ட இந்த கோலையடுத்து கோஸ்டாறிக்கா அணி விறுவிறுப்பாக மோதியது. ஆட்டம் தொடங்கி 12ஆவது நிமிடத்தில் கோஸ்டாறிக்கா அணி வீரர் பௌலோ வன்சோப், ஜேர்மனி அணியின் தற்காப்பு வளையத்தை உடைத்துக்கொண்டு தமது அணிக்கு ஒரு




கோலை அடித்து சமப்படுத்தினார்.

இதன்பின் இரு அணிகளும் கோல் அடிக்க பெரும் பிரயத்தனம் எடுத்துக்கொண்டிருந்த போது 17ஆவது நிமிடத்தில் ஜேர்மன் வீரர் மிரோஸ்லவ் குளோஸ் இரண்டாவது கோலை அடித்து தமது அணியை முன்னிலைப்படுத்தினார்.

இதன்பின்னர் இரு அணிகளும் ஒன்றையொன்று விட்டுக்கொடுக்காமல் ஆட்டத்தைத் தொடர்ந்ததால் முதல் பாதியாட்டத்தில் ஜேர்மனி அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் தொடக்கத்தில் இரு அணிகளுமே கோல் அடிக்க சிரமப்பட்டபோதும், போட்டி தொடங்கி 61ஆவது



நிமிடத்தில் ஜேர்மன் வீரர் குளோஸ் இரண்டாவது கோலை தனது அணிக்காக அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். இவர் தனது 28ஆவது பிறந்த தினத்தில் 2 கோல்களை முதல் போட்டியிலேயே அடித்து சாதனை படைத்தார்.

இதன்பின் விடாமல் போராடிய கோஸ்டாறிக்கா அணி சார்பில் 73ஆவது நிமிடத்தில் பௌலோ வன்சொப் ஜேர்மன் அணிக்கு எதிராக தனது இரண்டாவது கோலை அடித்தார்.

இந்த நிலையில் ஆட்டம் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தபோது 87 ஆவது



நிமிடத்தில் ஜேர்மனி வீரர் பிறின்ஜ் அடித்த கோல் அந்த அணியை வெற்றி இலக்குக்கு கொண்டுசென்றது.




ஆட்டநேர முடிவில் 4:2 என்ற அடிப்படையில் முதல் போட்டியில் ஜேர்மனி அணி வெற்றிவாகை சூடியது.



# ஐக்கிய இலங்கை கோட்பாட்டை ஜே.வி.பி ஏற்றுக் கொண்டுள்ளது

## என்கிறார் பாலித கொகன்ன



கொழும்பு —

ஐக்கிய இலங்கைக் கோட்பாட்டை ஜே.வி.பி ஏற்றுக் கொண்டிருப்பதாக சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

நேர்காணல் ஒன்றில் அவர் இது தொடர்பாகக் கூறியதாவது -

புதிய அரசியல் யாப்பு வரைவு குறித்து விடுதலைப் புலிகளுடன் ஆலோசிக்கப்படும்.

அரசியல் யாப்பு வரைவு தொடர்பாக முதல் முறையாக எமது அரசாங்கம்தான் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஐக்கியப்படுத்தப்பட்ட நாடாக இருக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கும்.

இதற்கு விடுதலைப் புலிகள் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், விடுதலைப் புலிகள் அறிவிக்கப்படாத அரசாங்கத்தை நடத்துவதாக ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

பாதாள உலகக் குழுவினர் கூட தங்களுக்கான காடையர்களையும், சொந்த சட்டங்களையும், விதிமுறைகளையும் வைத்துள்ளனர். விடுதலைப் புலிகள் சொந்த நிர்வாகத்தை நடத்துவதனால் இந்த நாட்டை பிளவுபடுத்தும் உரிமை அவர்களுக்குக் கிடையாது.

ஐரோப்பிய ஒன்றியத் தடையானது விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு திரும்பவைக்கும் ஒரு அழுத்தமாகும். அனைத்துப் பயங்கரவாத இயக்கங்களும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் என்பதுதான் இந்தத் தடையூடான செய்தி.

ஜனநாயகக் கட்டமைப்புக்குள் விடுதலைப் புலிகள் நுழையவேண்டும் என்பதற்கான பாடம் இது.

அரசியல் தீர்வு தொடர்பாக ஜே.வி.பி. சில குறிப்பிட்ட ஆட்சேபனைகளைத் தெரிவித்தது. இருந்தபோதும் ஐக்கிய இலங்கைக் கோட்பாட்டுக்குள் அரசியல் வழித் தீர்வுகாணும் அரசாங்கத்தின் முடிவை ஆதரிப்பதாக சர்வகட்சிக் கூட்டத்தில் ஜே.வி.பியும் ஏனைய கட்சிகளைப் போல் ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டது.

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளினது ஆயுதங்களை விடுதலைப் புலிகள் களைந்து விட்டனர். கருணா குழுவுக்கு எந்தவித உதவியும் அரசாங்கம் செய்யவில்லை என்று தெரிவித்துள்ளோம். அவர்கள் கொல்லப்படுவதற்காக விடுதலைப் புலிகள் எம்மை எதிர்பார்க்கக் கூடாது. கருணா ஒரு அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ளார். அந்தக் குழு மைய நீரோட்ட அரசியலுக்கு வரும் என்று நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் ஆதரவாளரென பணம் திரட்டியவர் கைது!

கொழும்பு —

இரகசிய பொலிஸ் அதிகாரியெனவும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளரெனவும் தெரிவித்து பதுளை உட்பட ஊவா மாகாணத்தின் பல இடங்களில் வர்த்தகர்களிடம் பணம் பெற்று வந்த மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கடந்த 7 ஆம் திகதி கைது செய்தனர்.

இவரிடமிருந்து பதுளையிலுள்ள வங்கிகளில் நகைகள் அடகு வைத்த பற்றுச் சீட்டும், 21 ஆயிரத்து 60 ரூபா பணமும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வெள்ளை வான் குழுவால் 7 இளைஞர்கள் கடத்தல்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு இருதயபுரத்தில் வெள்ளைவான் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் 7 இளைஞர்கள் கடந்த நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டனர். இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸாரிடம் இவர்களின் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

மாலை நேர வகுப்புக்குச் சென்ற மாணவர்கள் மற்றும் வீதியால் சென்ற இளைஞர்களே கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெள்ளைவான் மட்டக்களப்பிலிருந்து பொலநறுவை நோக்கிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈழத்தமிழர் போராட்டத்தை இந்திய அரசுக்கு விளக்குக!

## கருணாநிதிக்கு வட அமெரிக்கத் தமிழர்கள் கோரிக்கை

கொழும்பு —

ஈழத் தழிழர் போராட்டத்தை தமிழக முதல்வர் கருணாநிதி இந்திய மத்திய அரசுக்கு விளக்கவேண்டுமென வட அமெரிக்கத் தமிழர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வட அமெரிக்கத் தமிழர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

தமிழக வரலாற்றில் ஐந்தாவது முறையாக முதல்வர் பதவியை ஏற்பதன்மூலம் புதிய சாதனையை நிகழ்த்திய தங்களுக்கு வட அமெரிக்கத் தமிழர்களும், தமிழ் அமைப்புகளும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்தை மலர் சோலை ஆக்குவதற்காக மட்டும் தாங்கள் தமிழக முதல்வராகப் பதவியேற்கவில்லை. உலகெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்வு மலர்ச் சோலையாக மாறுவதற்காகவே தாங்கள் தமிழக முதல்வராகப் பதவியேற்றிருக்கிறீர்கள் என்பதே உலகெங்கும் வாழும் தமிழர்களின் எதிர்பார்ப்பு.

பிறப்பால் பின்னடைந்தோரை பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என முன்னுக்கு வர சட்டம் இட்டதற்கும், பாடசாலைகளில் தமிழைக் கட்டாய பாடமொழியாக்க சட்டமிட்டதற்கும் நன்றி.

உலகில் எந்த மூலையில் வாழும் தமிழனும் துன்பப்படும்போது, அவனுக்காகக் குரல் கொடுப்பேன் எனநீங்கள் வெளியிட்டு வந்த கருத்துகள் தங்கள் உள்ளுணர்வு வார்த்தைகள்.

ஈழத் தமிழர்களின் போராட்டம் சமாதானத்தின் மூலம் தீர்வு காணப்படாவிடின், கத்தியின்றி, இரத்தமின்றி பிரிந்த செக்கோ ஸ்லோவாக்கியா போன்று இரு நாடாகப் பிரிந்து கொள்வது சிறந்தது என்ற தங்களின் 77 ஆவது பிறந்தநாள் உரையை இன்றும் உலகத் தமிழ் மக்கள் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றனர்.

இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டங்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும், தி.மு.க.அரசாங்கமோ அல்லது நானோ ஒருபோதும் எதிராளிகள் அல்ல.

இலங்கையில் தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும். அங்கு சமாதானம் ஏற்படவேண்டுமென்பது எனது பெரு விருப்பம் என்ற தங்களின் செவ்வி - உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் உள்ளத்தை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும் செய்தி.

உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதும், கவலை அளித்துக் கொண்டிருப்பதுமான இலங்கைத் தமிழரின் பிரச்சினை - சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் விரைவில் தீர்க்கப்படவேண்டுமென்று தமிழ் நாட்டு மக்களின் இந்த அரசு விரும்புகிறது என்ற ஆளுநர் உரை- தமிழீழத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்த தமிழக அரசின் கரிசனைக்கு அமெரிக்கத் தமிழர்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

அப்பாவித் தமிழ் மக்கள்மீது சட்டத்துக்குப் புறம்பான முறையிலும், கண்மூடித்தனமாகவும் இலங்கை இராணுவத்தினர் தாக்குதல் நடத்துவதைத் தடுத்து, இலங்கையில் அமைதி திரும்பித் தமிழர்கள் அச்சமின்றி வாழ அதற்குரிய சகலவிதமான முயற்சிகளையும் தாங்கள் எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் தமது நியாயபூர்வமான உரிமைகளைப் பெற்று, நிம்மதியாக வாழ தங்களின் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டுமென்பதே உலகத் தமிழர்களின் ஒருமித்த எதிர்பார்ப்பாகும்.

ஈழத் தமிழர்கள் போராட்டத்தை மத்திய அரசுக்குப் புரிய வைக்க அக்கறையுடைய தங்களின் முயற்சியே தமிழர்களின் வேட்கை. நிச்சயமாகத் தாங்கள் தமிழக முதல்வராகப் பதவியேற்றதன் மூலம் உலகத் தமிழர்களின் வாழ்வு விடிவுபெறும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவின் முன்னோடிக்கு ஞாபகார்த்த முத்திரை

கொழும்பு —

கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியான வீரசிங்கத்துக்கு நினைவு முத்திரை வெளியிட அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியான வீரசிங்கத்துக்கு ஞாபகார்த்த முத்திரை வெளியிட வேண்டுமென நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த போதிலும் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இதையடுத்து, அண்மையில் தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜெயரட்ணவை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், கி.சிவநேசன் ஆகியோர் இது தொடர்பாக வலியுறுத்தியதையடுத்தே ஞாபகார்த்த முத்திரை வெளியிட அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 07ஆம் திகதி அமரர் வீரசிங்கத்தின் 114 ஆவது பிறந்த தினத்தையொட்டி ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இரு இராணுவங்கள் ஒருபோதும் இருக்கவே முடியாதாம்!

## என்கிறார் ரட்ணசிறி



கொழும்பு —

இலங்கையில் ஒரு இராணுவமே செயற்பட முடியும். இன்னொரு இராணுவம் செயற்பட ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டுமென பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.தே.கவின் மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார கொண்டு வந்த வடக்கு-கிழக்கு எல்லைக் கிராம மக்களின் பாதுகாப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைக்கு பதிலளித்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தை பிரச்சினைக்குள் இழுப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆட்படுகொலைகள், கடத்தல்கள், ஆத்திரமூட்டும் செயல்கள் மத்தியில் அரசு மிகவும் பொறுமையுடன் நடந்து கொள்கிறது. ஏனெனில் அரசுக்கு மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணமேயில்லை. ஆனால் அதனை எமது பலவீனமாகக் கருதி விடக்கூடாது.

தற்போதைய சூழ்நிலையில் கொழும்பில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதேபோன்றே நாட்டின் சகல பகுதிகளிலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றைத் தடுக்க நாம் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளோம்.

அரசுக்கு மட்டுமே இராணுவத்தை வைத்திருக்கும் உரிமையுள்ளது. அந்த படையைப் பலப்படுத்த வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

ஆயுதக்கொள்வனவு செய்வோம், படைகளைப் பலப்படுத்துவோம், இது ஒரு நாட்டின் இறைமை. ஆனால் இலங்கையில் இன்னொரு இராணுவத்துக்கு இடமளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# ரயில்வே ஊழியர்கள் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு —

ரயில்வே சமிக்ஞை மற்றும் வீதிப் பராமரிப்பு ஊழியர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்று முன்தினமும் தொடர்ந்தது.

உயர் பதவிகளை வகிக்கும் இருவர் பதவி விலக வேண்டுமெனக் கோரியே இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம் பெறுகிறது. இது தொடர்பாக ரயில்வே முகாமைக்கும், தொழிற் சங்கத்துக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தமையால் இந்தப் போராட்டம் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகிந்தவின் தலைமையின் கீழேயே படுகொலைகள் நடந்து வருகின்றன!

## முன்னாள் சபாநாயகர் குற்றச்சாட்டு

கொழும்பு —

நாட்டில் நடக்கும் அனைத்துக் கொலைகளுக்கும் புலிகள் மீது மட்டும் பழியைப் போடாதீர்கள். படுகொலைகளுடன் கருணாகுழு உட்பட வேறுபல ஆயுதக் குழுக்களுக்கும் தொடர்புள்ளதென எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் படுகொலைகள் அதிகரித்துவிட்டன. தென்பகுதியில் கூட அண்மையில் பலர் காணாமல் போனார்கள்.

அவிசாவளைப் பகுதியில் தலையில்லாத நிலையில் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இவர்களை கொன்றது யார்? அனைத்து கொலைகளுக்கும் புலிகளைக் குற்றஞ்சாட்ட முடியாது.

புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையையடுத்து, அரசு மீதும் சர்வதேசம் விரலை நீட்டியுள்ளது. இதனால், மக்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். புலிகள் மட்டும் கொலைகளைச் செய்யவில்லை. வேறுபல அமைப்புகளும் கொலைகளில் ஈடுபட்டுள்ளன.

அரசியல் ரீதியாகவும், வேறுபல காரணங்களுக்காகவும் கொலைகள் நடைபெற்றுள்ளன. எனவே, இது தொடர்பாகப் பூரண விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு உண்டு.

மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழேயே தற்போது படுகொலைகள் இடம்பெற்றுவருகின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசு தனது சரியான நிலைப்பாட்டை வெளியிட வேண்டும். ஒற்றையாட்சிக்குள் தீர்வென்பது சாத்தியப்படாததொன்று.

அவசரகாலச் சட்டம் மாதாமாதம் நீடிக்கப்பட்டாலும், கிளைமோர் குண்டுகள் வெலிசறைவரை வந்துவிட்டன. எனவே, அவரச காலச் சட்டத்தின் மூலம் மட்டும் அமைதியைக் கொண்டு வந்துவிட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருஞான சம்பந்தரின் குருபூசை தின நிகழ்வு

கிளிநொச்சி —

சைவ சமய முதல் குரவர் திருஞான சம்பந்தரின் குருபூசைத் தினத்தை திருநெறிக் கழகம் - உருத்திரபுரம் மாணிக்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் அனுசரணையுடன் நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் காலை 9 மணிக்கு உருத்திரபுரம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகள் நிகழ்த்துவார்.

சித்தாந்த பண்டிதர் வா.தயாபரசிவம் கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம், ஆசிரியர் கண்ணபிரான் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தொடர்ந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

# ஒவ்வொரு தமிழனின் சுட்டு விரல்களும் துப்பாக்கி விசையை அழுத்த வேண்டும்

## வீரமைந்தன் தெரிவிப்பு

கிளிநொச்சி —

எமது தாயக மண்ணிலுள்ள ஒவ்வொரு தமிழனின் சுட்டுவிரல்களும் துப்பாக்கி விசையை அழுத்த வேண்டும். அப்படி அனைவரும் வேறுபாடின்றி துப்பாக்கியை ஏந்தி விசையை அழுத்தும் போது தான் தமிழீழ முத்திரை மிக விரைவில் பதிக்கப்படும் என முகமாலை முன்னரங்கக் காவலரண் பகுதிப் போராளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய அக்கராயன் யூனியன்குளக் கிராம மக்கள் மத்தியில் உரையாற்றிய சாள்ஸ் அன்ரனி படையணிப் பொறுப்பாளர்களில் ஒருவரான வீரமைந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

இன்று இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் எமது உறவுகள் படும் இன்னல்களை நாங்கள் அறிவோம். அங்கு இராணுவத்தால் பொது மக்களா? அல்லது புலி உறுப்பினர்களா? என்று எவரும் அடையாளம் காணப்பட்டுக் கொலை செய்யப்படவில்லை. ஒட்டு மொத்தமாகத் தமிழன் என்ற நிலையிலேயே இராணுவத்தால் தினம் தினம் கொலை செய்யப்படுகின்றனர்.

இதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த யாழ். மண்ணையும், எமது மக்களையும் காக்க வேண்டியது இங்குள்ள ஒவ்வொரு மக்களினுடைய தார்மீகக் கடமையாகும்.

எனவே ஒட்டுமொத்தமாக அனைவரும் போராட்டத்தில் இணைந்து, தங்கள் பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும். எந்த வகையிலும் நாம் அஞ்சத் தேவையில்லை. அத்தனை தடைகளையும் தகர்த்தெறியும் வல்லமை எம் தேசியத் தலைவரிடம் உண்டு.

எனவே, அவரின் கரங்களுக்கு உரம் சேர்த்து, அவரது காலத்தில் எமது சுதந்திர தமிழீழத்தைப் பெற்று, சுதந்திரக் காற்றை சுவாசிக்க அனைவரும் போராட்டத்தில் ஒன்றிணைய வேண்டும் எனத் தெரிவித்தார். (09)

# கடலுணவு விற்பனை நிலையம் உடுத்துறையில் திறந்து வைப்பு

வடமராட்சி கிழக்கு —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு உடுத்துறை கிராமத்தில் அமைக்கப்பட்ட கடலுணவு ஏலவிற்பனை நிலையம் கடந்த திங்கட் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் அனுசரணையுடன் உடுத்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தால் 9 லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் இந்த விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை காலை 11 மணிக்கு உடுத்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- மங்கள விளக்கை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் க.நடராசா, வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.எஸ்.தியாகராசா, உடுத்துறை ஊரக மேம்பாட்டுக் குழுத்தலைவர் எஸ்.கனியன் ஆகியோர் ஏற்றினர்.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார்.

உடுத்துறை கிராம அலுவலர் மூ.வ.தவராசா கட்டடப் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைக்க, ஆழியவளை கடற்தொழில் பரிசோதகர் ந.கணேசமூர்த்திநாடாவை வெட்டி புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ், வடமராட்சி கிழக்கு துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன், கிராம அலுவலர் மூ.வ.தவராசா, வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.எஸ். தியாகராசா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (21)

# பயிற்சி நிறைவு நிகழ்வும் மாவீரர் நினைவு நிகழ்வும்

கிளிநொச்சி —

கிளிநொச்சி கனகபுரம் கிராம உள்ளகப் பாதுகாப்பு முதலாவது அணியின் பயிற்சி நிறைவும், மாவீரர்களான கேணல் ரமணன், நாகர் கோவில் களமுனைத் தளபதி லெப். கேணல் வீரமணி ஆகியோரின் நினைவு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகபுரம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

போராளி சுடர்மணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- வடகளமுனைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் ஜெரி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான பாவலன், நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன், கனகபுரம், ஜெயந்திநகர் சிறப்பு அரசியல் வேலைத்திட்ட பொறுப்பாளர் தர்சன், கிளிநொச்சி பிரதேச அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், பயிற்சி ஆசிரியர் நக்கீரன் ஆகியோர் அம்பன் சந்தி முன்பகுதியிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, கனகபுரம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை வட களமுனைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் ஜெரி ஏற்றி வைக்க, மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி மாவீரர் கேணல் ரமணனின் திருவுருவப்படத்துக்கு பயிற்சி ஆசிரியர் நக்கீரன் ஈகச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நாகர்கோவில் முன்னரங்க களமுனைத் தளபதி.மாவீரர் லெப். கேணல் வீரமணியின் திருவுருவப்படத்துக்கு அவரின் துணைவியார் ஈகச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

அடுத்து கனகபுரம் கிராமத்தைச் சேர்ந்த இரு மாவீரர்களின் தாயார்களான திருமதி மகேந்திரம், திருமதி சச்சிதானந்தம் ஆகியோர் ஈகச்சுடரேற்றி, மலரஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகளை பாவலன், நவம் அறிவுக் கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கனகபுரம் மகா வித்தியாலய மாணவியின் நடன நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து முதலாவது பயிற்சியை நிறைவு செய்து வெளியேறிய உள்ளகப்பாதுகாப்பு அணியினருக்கான சான்றிதழ்களை லெப். கேணல் ஜெரி வழங்கினார். (09)

# வெதுப்பகங்களில் சோதனை!

கிளிநொச்சி —

தமிழீழ விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள வெதுப்பகங்கள் சோதனையிடப்பட்டன.

இதன்போது வெதுப்பகங்களில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் நிறை, தரம் என்பன தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டது.

சோதனையின் போது மேற்படி விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத வெதுப்பகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழீழ விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

# சமகால அரசியல் கருத்தரங்கு

வட்டக்கச்சி —

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாண்டியன் குளம் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு பாண்டியன்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளைப் பாண்டியன்குளம் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம், அரசியற்துறைப் போராளி வண்ணன், துணுக்காய் பாண்டியன் குளம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா ஆற்றினார். (09)


IBMS

A/L பரீட்சை எழுதி விட்டீர்களா? What Next ?



கவலையை விடுங்கள் !
உங்களுக்காகவே IBMS !!
IBMS உடன் இன்றே இணையுங்கள் !!!



பதிவுக்கட்டணம் முற்றிலும் இலவசம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 18.06. 2006
பிரிவு II : 21.06. 2006
பிரிவு III : 02.07. 2006
பிரிவு IV : 10.07. 2006
பகல் 10.00 மணி

Diploma Courses

Dip. in MS Office
Dip. in Desk Top Publishing
Dip. in Internet Technology
Dip. in Hardware Engineering
Computerized Accounting (Tally 7.2)

- அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
- இலகு தவணைக் கட்டணவசதி
- மாணவர்களுக்கான தனிப்பட்ட கவனிப்பு
- வரையறையற்ற செய்முறை
- அங்கீகாரமுள்ள சான்றிதழ்
- குறுகிய காலப் பயிற்சிநெறிகள்

• Registered with Tertiary and Vocational Education Commission, Sri Lanka.
• Registered to Association of Computer Training Organisations, Sri Lanka.

INSTITUTE OF
BUSINESS MANAGEMENT STUDIES
# 209, Manipay Road, Vaitheeswara Junction, Jaffna.
Tel : 021 222 8232 Email : ibms_jaffna@rediff.com
Branches : NMMV Road, Nelliady Sangaththanai, Chavakachcheri


# கரும்புலிகள் நாள் குறித்த மாவீரர் பணிமனையின் அறிவிப்பு

கிளிநொச்சி —

எதிர்வரும் ஜூலை 05 கரும் புலிகள் நாளை முன்னிட்டு தாயக மக்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தமிழீழ மாவீரர் பணிமனையால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு -

கரும்புலிகள் நாளுக்கு முதல் நாள் கரும் புலிகள் படம் வைத்திருக்கும் மண்டபங்கள், தூபிகள், பிரதிமைப்படங்கள் (கட்டவுட்) ஆகியன துப்புரவு செய்து புனிதப்படுத்தி அலங்கரித்தல் வேண்டும்.

2.முதல் நாளே வீதிகள், பொது நிறுவனங்கள், ஆகியவற்றை அலங்கரித்து சிரமதானங்கள் மேற்கொள்ளுதல்.

3. 05.07.2006 அன்று காலை 9 மணிக்கு தகுந்த, வேண்டிய இடங்களில் பொதுச்சுடரேற்றி, தேசியக் கொடியேற்றி, ஈகச் சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து, அகவணக்கம் செலுத்தி வீரவணக்க உரையும் நிகழ்த்தலாம்.

4. காலையிலிருந்து மாலை வரை பொது இடங்களில் கரும்புலி களின் படங்கள் வைத்து பாடல்கள், வரலாறுகளை ஒலிபரப்புதல் வேண்டும்.

5. மாலை 6.15 மணிக்கு பிரதேச வாரியாகவோ, மாவட்ட ரீதியாகவோ மக்கள் ஒன்று கூடும் இடங்களில் பொதுக்கூட்டம், கலைநிகழ்வுகள் நடத்தலாம். இது 10.30 மணிக்கு முடிவுற வேண்டும்.

6. பிரதேச வாரியாக மண்டபங்கள் அமைத்து, கரும்புலிகளின் படங்களை வைத்து மக்கள் வீரவணக்கம் செலுத்தும் வண்ணம் ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

7. எமது இன்றைய நிலைக்கேற்ப சிக்கனமாக, புனிதமாக, எழுச்சியாக மக்கள் இணைந்து செயற்படும் வண்ணமாக மக்கள் போராட்ட நிலைப்பாட்டை ஏற்று, ஒன்று சேர்ந்து இணைந்து கொள்ளும் வண்ணமாக இந்த நிகழ்வை நடத்துதல் வேண்டும்.

8. நிகழ்ச்சி நிரல்களையும், ஆலோசனைகளையும் முன்கூட்டியே அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# தற்காப்பு பயிற்சி நிறைவு

கிளிநொச்சி —

வட்டக்கச்சி பத்து வீட்டுத்திட்ட அறிவாணன் பயிற்சிப் பாசறை தற்காப்பு பயிற்சி நிறைவுநிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அரசியல்துறை விசேட வேலைத் திட்ட பொறுப்பாளர் சாகியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை பயிற்சி ஆசிரியர் கவியரசன் ஏற்றினார்.

தொடர்ந்து மாவீரர் அறிவாணனின் திருவுருவப்படத்துக்கு ஈகச்சுடரையும், மலர் மாலையையும் அவரது பெற்றோர் ஏற்றி அணிவித்தனர்.

தொடர்ந்து சிறப்புரைகளை அரசண்ணா, சாகியன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தில்லையம்பதியாள் துணை

# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

# திருவருள்மிகு சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## இரதோற்சவ விழா சிறப்புமலர் - 10.06.2006

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணி நாடாம் இலங்கை மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங் களுள் ஒன்றாக விளங்கும் இத்திருக்கோயிலும் ஒன்றாகும்.


ஆரம்பத்தில் பேச்சி அம்மன் என்னும் திருநாமத்துடன் அன்னை சிவகாமி 1850 ஆம் ஆண்டுகளுக்கு முன் சூளை கள் சூழ மாமரநிழலில் முன்னைய பெரியார்களால் பராம ரிக்கப்பட்டு வந்தாலும் "வேலன்" என்னும் பெரியவரா லேயே அம்பிகையின் ஆலயம் தோற்றம் பெற்றது எனலாம்.

1855 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசாரசீலரான வேலன் என்பவர் அன்னையின் ஆலயத்திற்கு விளக்கு வைத்து வழி படத் தொடங்கினர். இது ஆலய வழிபாட்டின் மறுமலர்ச் சிக் காலம் எனலாம். அத்துடன் கருங்கல்லினாலான அம் பிகையின் திருவுருவ விக்கிரகம் கோயிலில் வைக்கப்பட் டது.

1910 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவ் ஆலயம் நான்கு பக்கமும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு கூரை ஓட்டினால் வேயப்பட்டு 15 அடி விஸ்தீரணம் கொண்ட ஆலயமாக உருப்பெற்றது.

பஞ்சமணியும், சேமக்கலமும், சந்தனக் கிண்ணம் மற் றும் பூசை மணியும் இன்றுவரை பேணிப்பாதுகாத்து வரு தல் குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ ஆசாரத்தைப் பேணும் சைவப் பெரியார் சபா பதி மார்க்கண்டேயர் அவர்கள் பூசைக்காக நியமிக்கப்பட் டார். இக்காலத்திலேயேதான் வைகாசி விசாக படசத்தில் ஆடு, கோழி போன்ற உயிர்ப்பலி இடுதலும், மடை போடு தலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 1958 வரை இவரது தொண்டு சென்றது. 1959 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் முத் தன் இராசன், பொன்னன் சுந்தரலிங்கம் இவ் வூரைச் சேர்ந்த வீரகத்தி தம்பிஐயா ஆகியோ ரின் பெருமனதினால் தர்மபரிபாலன சபை உருவாக்கப்பட்டு இச் சபையினால் இவ் ஆல யம் பொறுப்பேற்கப்பட்டு இரண்டு காலப் பூசை அதா வது காலை, மாலை பூசை வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நித் திய பூசகராக அன்று முதல் வீ.தம்பிஐயா நியமிக்கப்பட்டார். இவர்களது முயற்சி யால் ஆலயத்தில் நடைபெற்றுவந்த வைகாசி விசாகப் பொங்கலில் இடம்பெற்ற பலி யிடுதல், மடை போடுதல் போன்ற முறைமைகள் மாற் றப்பட்டு, ஆலயத் தின் புறச்சூழலில் அமைந்திருந்த சூளை மேடுகள் அகற்றப்பட்டு ஆல யத்திற்கென ஒரு விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டது.




மலராக்கம் : ஐ.யோகராஜா
செயலாளர், தில்லையம்பதி

1962 ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தி னால் ஒன்றுகூடிய மக்கள் ஆலயத்தைச் சிறப்பான திருப் பெரும் கோயிலாக அமைப்பதற்கு பாலஸ்தாபம் செய்த னர். 1965 ஆம் அண்டு முன்னாள் யாழ்.மாவட்ட நீதிபதி சோ.தனபாலசிங்கம் அவர்களும், யாழ்.பொலிஸ் சுப்பி றிண்டர் திரு.வான்சண்டன் அவர்களும், வடமாகாண அரசாங்க அதிபர் திரு.ஐவன் சமர விக்கிரம அவர்களும் அஸ்திவாரக்கல் நாட்டு விழாவை முன்னின்று செய்தனர்.

1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17 ஆம் திகதி வியாழக் கிழமை உத்தரட்டாதி நட்சத்திரத்தில் சுபமுகூர்த்த நன் நாளில் பிரம்மஸ்ரீ குமாரசாமி குருக்கள் அவர்களால் பிர திஷ்டா மஹா கும்பாபிஷேசம் நடைபெற்றது. அன்றிலி ருந்து "சிவகாமி அம்பாள்" எனும் திருநாமம் சூட்டப்பட் டது.

1966 ஆம் அண்டு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித் தது.

09.07.1971 ஆம் ஆண்டு தேர்த்திருப்பணி அங்குரார்ப் பண நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து ரிஷபம், பலிப்



மாமர நிழல் தனிலே வந்தமர்ந்த சிவகாமி
மருவும் அடியருள்ளம் கொலுவிருந்தாள் தேவி!
தேமதுரத் தமிழில் தேவி புகழ் பாடுவாய்!
நாமமஹிமையினால் நல்லருள் செய்திடுவாய்!

பீடம், கொடித்தம்பம், வசந்தமண்டபம், மணிக்கோபுரம், திருமஞ்சனக் கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறை வேற்றப்பட்டு, 1976 ஆம் அண்டு தேர் வெள்ளோட்டமும் இடம்பெற்றது.

1977 ஆம் ஆண்டு அம்பாள் திருவூஞ்சல் காப்பு சுட்டிபுரத் தில் இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப் பட்ட சிறப்பும் உடையது.

திருக்கோயில் வாயிலில் தல விருட்ஷமாகக் காணப்படம் ஆலும், அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு பொந்தினூடாக அம்பாளின் விமானத்தில் கலசத்தினைக் காணக்கூடியதாக வுள்ளது. இது அற்புதமான ஒன்றாகும்.

மீண்டும் 1982 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகாசபை இலங்கை இணைப் பிரதித் தலைவராக இருந்த அரச அதிபர் திரு.யோகோந்திரா துரைச்சாமி அவர் களால் தைப்பூச தினத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு திருப் பணி வேலைகள் தொடங்கப்பட்டன.

1990 இல் திருக்கோயில் வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று காசியில் இருந்து காசி விஸ்வநாதர் இங்கு வரவழைக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின் போது அம்பாளின் கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கையி னாலும் அம்பாளுக்குப் பொன் முடியும், திருக்கோரணம் சூட்டு விழாவும் கொண்டாடப்பட்டுது.

கவி மாமணி ந.வீரமணி ஐயர் அவர்களால் ஆக்கப்பெற்று தென்னிந்திய பக்திப் பாடகர் கலைமாணி ரி.எம்.சௌந்தர ராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா 1994 இல் இடமபெற்ற வைகாசி வசந்த உற்சவ தினத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரி யார் சுவாமிகள் ஆசியுடன் வெளி யிடப்பட்டது. அத்தோடு 1997 ஆம் ஆண்டு இரண்டாவது பக்திப் பாமாலை ஒலிப் பதிவுநாடாவும் வெளியீடு செய்யப்பட்டது.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ சக்கரம் 1998 இல் இடம்பெற்ற பங்குனி உத்தர தினத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு 25 ஆவது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்கு தங்கக் குடை சூட்டு விழாவும், இராஜகோபுரம் அமைப்பதற்கான அங்குரார்ப் பண வைபவம் நடைபெற்றன.

இதைத்தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு (மஹோற்சவ காலப்பகுதியில்) பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட தில்லையம்பதியாள் கீர்த்தனைகள் தென் னிந்தியக் கலைஞர்களான கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் மற்றும் ரி.எம்.எஸ்.செல்வக்குமார் ஆகி யோரால் பாடப்பட்டது.

2003 ஆம் ஆண்டு மஹோற்சவப் பெருநாள் நிறைவுற்ற கையோடு பாலஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு நவக்கிரக மும் புதிதாக அமைக்கப்பட்டு அம்பாளுக்கு செங்களனித் தடாகமும் அமைக்கப்பட்டது. அத்துடன் வசந்தமண்ட பத் தெற்குவாசல் திறக்கப்பட்டது.

இந்தியாவின் கும்பகோணத்தில் இருந்து தருவிக்கப் பட்ட நடராஜப்பெருமான், மாணிக்கவாசகர், நவக்கிரக மூர்த்திகள் என்பன பிரதிஸ்டை செய்யப்பட்டதுடன் தமி ழகத்தின் கும்பகோண "நவகன்னிகை" எனப்போற்றப் படும் மஹாமாசிமா தீர்த்தங்கள் கொண்டு 2004 ஆம் ஆண்டு சுபானு வருடம் பங்குனி உத்தர தினத்தன்று சிவஸ்ரீ சதா.மகாலிங்க குருக்கள் தலைமையில் மஹாகும்பாபிஷே கம் நடைபெற்றது.

அத்தோடு அருட்கவி செம்மல் பிரம்பஸ்ரீ ந.வீரமணி ஐயர், இரா.இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்தியப் பாடகர்களான ரி.எம்.எஸ். செல்வக்குமார், கலைமாமணி டாக்டர்.சீர்காழி, ஜி.சிவசிதம்பரம் ஆகி யோரால் பாடப்பெற்ற "தில்லையம்பதியாள் கும்பாபிஷேக கீர்த்தனைகள்" - பாகம் - 4 வெளியீடு செய்யப் பட்டது.

அன்னையின் அளப்பரிய அருளினால் நவகோண வடி வில் ஐந்து தளங்களை உள்ளடக்கிய இராஜகோபுரத் திருப் பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றது. தென்னிந் திய சிற்ப வல்லுநர்களால் அமைக்கப்பட்டு வரும் இராஜ கோபுரத்திற்கான வேலைகள் அனைத்தும் நிறைவேறிய தும் புனருத்தாரண மஹாகும்பாபிஷேக வைபவம் மிக விரைவில் இடம்பெற அன்னையின் திருவருளை நாடி வேண்டி நிற்கிறோம்.

"தில்லையம்பதியாளே! சிவகாமசுந்தரியே சரணம்!!"
பரிபாலனசபை திருக்கோயில்.

ராகம் : காமாஸ் தாளம் : ஆதி

ஊர் கூடி வடம்பிடித்தே உளம் உருகச் - சித்திரத்
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி (ஊர் கூடி)

அனுபல்லவி

வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாமசுந்தரி (ஊர் கூடி)

சரணம்

தேரின் திருத்தொங்கல் வாகுமாலை சூட
நாதஸ்வர கானம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருகிக் கண்ணீர் சொரிய
ஊரின்புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள்
(ஊர் கூடி)

புன்னகை புரிந்தருள் பொலிவுறத் தந்தனள்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும்போது
இன்னமுத்தத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர் கூடி)

ஆக்கம் : அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்
பாடிவயர் : கலைமாணி ரி.எம்.சௌந்தரராஜன்.

### பரிபாலனசபை ஆசி

அகிலாண்டகோடி பிரமாமண்ட நாயகி அகிலத் தைக் காத்திடும் தில்லையம்பதி தேவி சிவகாம சுந்தரி ரதத்தில் ஆரோகணித்து வலம்வந்து சகல மக்களுக்கும் நாட்டின் சாந்தி, சமாதானம் கிடைத்து நல்வாழ்வு அளிப்பாயாக! பிரார்த்திக்கின்றேன்.

தலைவர்,
சி.ஆனந்தராஜா,
திருக்கோயில் பரிபாலனசபை, மத்தியகிராம முன்னேற்ற சங்கம், மத்திய சனசமூக நிலையம்.

### பிரதமகுருவின் ஆசியுரை



சிருஸ்டி திதி சம்ஹாரம் கிரோபவம் அனுக்கிரகம் எனப்படுகின்ற பஞ்சகிருத்தி பங்களை உணர்த்தும் மஹோற்சவமே உற்சவங்களில் சிறந்த பிரமோற்சவமாகும். எனவே நித்திய, நைமித்திய கிரியைகளில் ஏற்படுகின்ற குறைகளைத் தீர்ப்பதற்கே பிராயசித்தமாக இந்த மஹோற்சவத்தை நடத்துகின்றோம். ஆகவே தில்லையம்பதியில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் திருவருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளின் திருவருளோடு நித்திய, நைமித்திய கிரியைகள் செய்வதற்கும் பிரதம குருவாக இருப்பதற்கும் அம்பாளின் திருவருள் கிடைத்துள்ளது.

இந்தவருடம் மஹோற்சவம் மிகவும் சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் நடைபெற்று வருகின்றன. (10.06.2006) சனிக்கிழமை இன்று நடைபெறுகின்ற இரதோற்சவத்தில் அனைத்து அடியார் பெருமக்களும் திருக்கோயிலுக்கு வருகை தந்து ரதோற்சவ விழாவில் கலந்துகொண்டு அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் மற்றும் தில்லையம்பதியாளின் பஞ்சதளத்திலான இராஜ கோபுரம் தீர்த்தக்கேணி, கல்யாண மண்டபம் போன்ற பல திருப்பணிகள் மிகக் குறுகிய காலத்தில் நடைபெற்று இத் திருக்கோயில் மென்மேலும் சிறப்புற வேண்டும் என்று பிரார்த்தனை செய்து இத்திருக்கோயிலை நன்றாக பரிபாலனம் செய்து வருகின்ற பரி பாலனசபையினர், இந்து இளைஞர் சபையினர், உபயகாரர்கள், அடியார்கள், உலக மக்கள் எல்லோரும் தில்லையம்பதி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளின் திருவருளோடு சாந்தி, சமாதானம் கிடைக்கப்பெற்று, சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ வேண்டி எனது ஆசியுரையை உரித்தாக்குகின்றேன்.

இங்ஙனம்
பிரதமகுரு, சிவாச்சார்யமணி, சிவகாம கிரியா தத்துவநிதி சிவப்பிரம்மஸ்ரீ
**இரங்க - வரதராஜக் குருக்கள்,**
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் தில்லையம்பதி.

விழா சிறப்புற வாழ்த்துவோர்

**காருசன் தையலகம்** கோண்டாவில் வடக்கு, கோண்டாவில், தில்லையம்பதி

**வலம்புரி கட்டடப் பொருள் விநியோகஸ்தர்** பலாலி வீதி, உரும்பிராய், கோண்டாவில்.

**தில்லையம்பதி மோட்டோர்ஸ்** 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**மயில் டிஜிற்றல் போட்டோ** வெளிப்புற படப்பிடிப்பாளர் (றமேஸ்) கோண்டாவில்.

**செல்வா எலக்றிக்கல்ஸ்** பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

**அம்பாள் ஹாட்வெயர்** 51, பலாலி வீதி, உரும்பிராய்.

**ராஜ் வீடியோ** அன்னங்கை, உரும்பிராய் மேற்கு.

**செல்லப்பா சற்குணம்** தைர்&சீற், குசன் வேர்க்ஸ் இல, 3. ஜிம்மா மொஸ் லேன், யாழ்ப்பாணம்.

**விஜய் சில்க்** 223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**உதயன் போட்டோ** வெளிப்புற படப்பிடிப்பாளர் (அல்பம் செய்து கொடுக்கப்படும்) தில்லையம்பதி,கோண்டாவில்.

**புலவர் வீடியோ** கோண்டாவில், தில்லையம்பதி

**பாலா வீடியோ** கோண்டாவில், தில்லையம்பதி

**சியானா அலங்காரப் பந்தல் சேவை** கோண்டாவில், தில்லையம்பதி

## Fast Track @ AIMS

**15 நாட்கள் மட்டுமே**

1. Microsoft Office-2003
   - Introducation to Windows Xp
   - Word
   - Excel
   - Access
   - Assignment
   - Power Point Presentation
2. Computer Hardware
   - Introducation to Hardware
   - Identification of Parts
   - Assembling & Installation
   - Setup & Configeration
   - O/S & Software Instalautation
   - Trouble shooting Techniques
3. Graphic Designing & Publishing
   - Introducation to DTP
   - PageMaker
   - Photoshop
   - CorelDraw & publishing Techniques
   - Project work

*Starts on*
Batch -I:18.06.2006 காலை
Batch -II: 21.06.2006 9.00 மணி

மேலதிக விபரங்களுக்கு,
இயக்குனர்,
#118 பலாலிவீதி,
திருநெல்வேலி
(தபால்பெட்டி சந்தி அருகில்)

AIMS Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Center for FOSS & LAMP

## ராஜா யாழ்ப்பாணம்

பரத்,
பத்மபிரியா
ஆரியா
மற்றும் பலர்
நடித்த



**பட்டியல்**
(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

## ஹோட்டல் குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்று குத்தகைக்கு விடப்படும்.

(2298)

தொடர்பு :
0777178493

## மனோகரா யாழ்ப்பாணம்

குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்
அஜித்குமார்,
சதா



**திருப்பதி**
(7 ஆவது வெற்றிவாரம்)

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

## நிறைஞ்சனாஸ் சங்கானை

சூரியா, அசின்,
பிரகாஷ்ராஜ் நடித்த

**கஜினி**

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30



யாழ். பல்கலைக்கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கான
30 ஓவர்களினைக் கொண்ட

## துடுப்பாட்டப் போட்டி - 2006

**மாற்றப்பட்ட புதிய போட்டி அட்டவணை**

| நேரம் | 10.06.2006 சனிக்கிழமை | 11.06.2006 ஞாயிற்றுக்கிழமை | 13.06.2006 செவ்வாய்க்கிழமை | 18.06.2006 ஞாயிற்றுக்கிழமை |
|---|---|---|---|---|
| 8.30 | சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் Vs பற்றீசியன் விளையாட்டுக்கழகம் | | | இறுதி ஆட்டம் |
| 12.30 | யாழ்.பல்கலைக்கழக அணி Vs ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் | சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் Vs ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் | யாழ்.பல்கலைக்கழக அணி Vs பற்றீசியன் விளையாட்டுக்கழகம் | |

**விளம்பர அனுசரணை: நமது ஈழநாடு**

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கார்ப் பரந்தன் - பூநகரி வீதி

## உடனடி வேலை வாய்ப்பு

மேற்குறிப்பிட்ட வீதி அபிவிருத்திப் பணிக்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு தகுதியும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) **திட்ட முகாமையாளர்** (Project Manager)
பொறியியல் பட்டமும் குறைந்தது ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட வீதி அபிவிருத்திப் பணிகள் தொடர்பான அனுபவம் அல்லது அதற்குச் சமமான தகுதியுடையவருமாக இருத்தல் வேண்டும். (பட்டயப் பொறியியலாளர் அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கி திட்ட அனுபவம் அல்லது வெளிநாட்டு நிதியுதவி வீதித் திட்டம் கையாண்ட அனுபவம் விரும்பத்தக்கது)

2) **திட்டப் பொறியியலாளர்** (Project Engineer)
குடிசார் பொறியியலில் பட்டமும் குறைந்தது மூன்று வருட வீதி அபிவிருத்தி வேலை தொடர்பான அனுபவம் அல்லது அதற்குச் சமமான தகுதியுடையவருமாக இருத்தல் விரும்பத்தக்கது.

3) **இயந்திரவியல் பொறியியலாளர்** (Mechanical Engineer)
பொறியியல் பட்டமும் இயந்திரவியல் பரீட்சையில் சித்தி குறைந்தது மூன்று வருட அனுபவமும் (பொருள் பரிசோதித்தல் அத்துடன் தரக் கட்டுப்பாடு) அல்லது அதற்குச் சமமான தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

4) **பொறியியலாளர்கள்**
பொறியியலாளர் பட்டமும் வீதி அபிவிருத்தி அனுபவமும் விரும்பத்தக்கது. அல்லது அதற்குச் சமமான தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

5) **நில அளவையாளர்கள்** (Surveyor)
நில அளவையாளர் பட்டமும் அத்துறைசார் அனுபவம் அல்லது அதற்கு நிகரான தகுதியுடையவர் கருத்தில் கொள்ளப்படுவர்.

6) **கணிய அளவையாளர்கள்** (Quantity Surveyor)
துறையில் பட்டமும் ஆகக்குறைந்தது ஒரு வருட வீதி தொடர்பான துறைசார் அனுபவம் அல்லது,
கணிய அளவை (NCT) உடன் நான்கு வருட அனுபவம் அல்லது அதற்குச் சமமான தகுதியுடையவர்.

7) **தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்** (Technical Officer)
N.D.T உடன் மூன்று வருட அனுபவமும் அல்லது N.C.T உடன் ஐந்து வருட அனுபவமோ அதற்குச் சமமான தகுதியுடையவர்.

**தி.இராசநாயகம்**
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம். [C/5390]

## மங்களகரமான திறப்புவிழா




வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கமைய எமது புதிய காட்சியறையை 10.06.2006 இன்று சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு இல 160 C,K.K.S றோட் சுன்னாகத்தில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

- வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கமைய தொழில்நுட்ப வல்லுநர்களின் கைவண்ணத்தில் உருவான உயர்தர உருக்குத் தளபாடங்கள் எம்மால் உருவாக்கப்பட்டு விற்பனையாகின்றன.
- உங்கள் மன வண்ணங்களை, கலை வண்ணவடிவமிக்க தளபாடங்களாக்கித் தருகின்றோம்.

- சோக்கேஸ் வகைகள்
- T.V. ஸ்ராண்ட்
- பிளாஸ்டிக் கதிரைகள்
- பிரம்புக் கூடைகள்
- சிறிய கபேட், கபேட்
- கபேட்
- கபினற்
- மேசை வகைகள்
- சுழல் கதிரைகள்
- வோட்றப்
- கண்ணாடி அலுமாரி வகைகள்
- கணனி மேசைகள்
- பாட்டிசன் கபேட்
- அலுவலக அலுமாரிகள்
- சாப்பாட்டு மேசைகள்
- றெசிங் ரேபிள்
- புத்தக அலுமாரிகள்

**விநியோகம் இலவசம்!**

*உத்தரவாதமிக்க உறுதியை நாம் வழங்குகின்றோம்.*
*உங்கள் நிறைவே எங்கள் மகிழ்ச்சி.*

நீங்கள் அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம்
160 c, K.K.S. வீதி, சுன்னாகம். [C/5387]

# குடாநாட்டில் மீண்டும் உருவாகும் மனிதப் புதைகுழிகள் மனித உரிமைகள் அமைப்புகளே நடவடிக்கை எடுங்கள்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் மீண்டும் மனிதப் புதைகுழிகள் உருவாகி வருகின்றன. இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என கோப்பாய் மனித புதை குழிகள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் யாழ். குடாநாட்டில் பல அப்பாவிப் பொதுமக்கள் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பாக மனித உரிமைகள் அமைப்புகளிடமும், சர்வதேச அமைப்புகளிடமும், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவி டமும் மக்கள் முறையிட்டபோதும் இது வரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

காணாமல் போனவர்களின் சடலங்கள் இராணுவ முகா முக்கும், காவலரணுக்கும் அண்மையிலிருந்து இப்பொழுது மீட்கப்பட்டு வருகின்றன.

இந்த மோசமான படுகொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். 1996 ஆம் ஆண்டு 600 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டனர்.

மீண்டும் யாழ். குடாநாட்டில் மனிதப் புதைகுழிகள் உருவாகின்றன. இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும், மனித உரிமை ஆணைக்குழுவும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை அரசின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும். இவற்றை உடன் நிறுத்த வேண்டும்.


இல்லையேல் இனிவரும் காலங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்படும் மிக மோசமான நிலை உருவாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கோப்பாயில் காணாமல் போன மதகுரு தொடர்பாக ஏற்கனவே பல முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் - இராணுவத்தினரே அவரைக் கைது செய்துள்ளனர் என உறவினர்கள் தெரிவித்திருந்தபோதும் - போர்நிறுத்தகண்காணிப்புக் குழுவோ, மனித உரிமை அமைப்புகளோ எந்த விதநடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

அதன் காரணமாகவே அவர் சடலமாக மீட்கப்பட்டார். மறுநாள் இன்னொருவர் அந்த இடத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இது இராணுவ நடமாட்டம் உள்ள பிரதேசமாக காணப்படுவதால், இந்தப் படுகொலைகள் இராணுவத்தினருக்குத் தெரியாமல் நடக்க வாய்ப்பில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அனைவரும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






அண்மையில் நடைபெற்ற வல்வை சிதம்பரக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் அ.விஜயநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் வரதீஸ்வரன் ஆகியோர் நிற்பதையும், சிறப்பு விருந்தினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள் - கசன்)

# லைசன்ஸ், தலைக்கவசம் இல்லாதோரிடம் கிற்காட் வாங்கித் தருமாறு கோரும் படையினர்

சித்தன்கேணி —

கடந்த சில நாட்களாக காரை நகர்- சங்கானை பிரதான வீதியில் பயணிப்போரிடம் படையினர் அடையாள அட்டைகளை வாங்கி வைத்துக் கொண்டு கிற்காட்,சிகரெட் போன்ற பொருட்களை வாங்கித் தந்து விட்டு அடையாள அட்டைகளைப் பெற்றுச் செல்லுமாறு வற்புறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியில் வீதிச் சோதனை கடமைகளில் ஈடுபட்டு வரும் படையினர் வீதியால் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போரை நிறுத்தி சோதனை செய்து விட்டு, தலைக்கவசம் அணியாமை, சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட மோட்டார் ஆவணங்கள் இல்லாமல் வருபவர்களிடம் அடையாள அட்டைகளை வாங்கி வைத்துக் கொண்டு கிற்காட், சிகரெட் போன்றவற்றை வாங்கி வந்து தந்து விட்டு அடையாள அட்டைகளை மீளப் பெற்றுச் செல்லுமாறு வற்புறுத்துகின்றனர்.

இதையடுத்து அவர்களும் வேறு வழி இல்லாமல் படையினர் கூறும் பொருட்களை வாங்கிக் கொடுத்து விட்டு அடையாள அட்டைகளை மீளப் பெற்றுச் செல்வதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் இந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரிடம் சோதனை செய்த படையினர் அவர் மோட்டார் போக்குவரத்து ஆவணங்களை படையினருக்கு காண்பித்த போதும் அவரை மாவடி இராணுவ முகாமுக்கு விசாரணைக்கென அழைத்துச் சென்று இரவு 10 மணிக்கு பின்னர் விடுவித்ததாக கூறப்படுகிறது.

பொலிஸார் மேற்கொள்ள வேண்டிய சாரதி அனுமதிப்பத்திரம், தலைக்கவசம் அணியாமை போன்ற சோதனைகளை படையினர் மேற்கொள்வது குறித்து அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

## மலிவு விலையில் இயற்கைப் பசளை

நல்லூர் —

யாழ். மாநகரசபையால் காக்கைதீவில் பராமரிக்கப்பட்டு வரும் பசளை நெய் நிலையத்தில் உற்பத்தியாகும் இயற்கைப் பசளையை அனைத்து விவசாயிகளும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம் என மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

இந்தப் பசளையில் நைதரசன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் ஆகிய மூலகங்கள் செறிந்திருப்பதால் அது தரமானதென யாழ்ப்பாண பல்கலைக் கழக விவசாய பீடாதிபதி உறுதி செய்துள்ளார். இதனால் எந்த வித தயக்கமும் இன்றி 1 லோட் ரூபா 1000 இற்கு பெற்று பயன்படுத்தலாம் எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

## கைத்தொழிலாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

சண்டிலிப்பாய் —

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கைத்தொழிலாளர்கள் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இது தொடர்பான கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கைத்தொழிலாளர் சங்கத்துக்கான நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

இந்தச் சங்கத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைத்தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளலாம் என சங்கத்தினர் தெரிவித்தனர்.

## ஸ்ரீ ராம கிருஸ்ண சேவாச்சிரம பௌர்ணமி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் —

யாழ். ஸ்ரீராம கிருஸ்ண சேவாச்சிரமம் நடத்தும் பௌர்ணமி தின நிகழ்வுகள் நாளை காலை 9 மணிக்கு நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பஜனையுடன் ஆரம்ப மாகவுள்ள இந்த நிகழ்வில் - தலைமையுரையை ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை அதிபர் பிரம்ம ஸ்ரீ கு.தியாகராஜ குருக்களும், சிறப்பு ஆன்மீக உரையை ஸ்ரீராம கிருஸ்ண சேவாச்சிரம பொருளாளர் க.தெய்வேந்திரமும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து தீபாராதனை மற்றும் தெய்வத் திருமூவர் திருவுருவப் படங்கள் அன்பளிப்பு என்பனவும், ராமகிருஸ்ணமிசன் வெளியீடுகளின் புத்தகக் கண்காட்சியும், 'எழுந்திரு! விழித்துக்கொள்' சுவாமி விவேகானந்தரின் புகைப்படக் கண்காட்சி என்பனவும் இடம்பெறும்.

நிறைவாக ஸ்ரீராம கிருஸ்ண மிசன் வெளியீடான 'சிலையும் நானே! சிற்பியும் நானே' விடியோ படக்காட்சியும் இடம்பெறும்.

அத்துடன் சேவாச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் மாலை 4.30 மணிமுதல் 6.30 மணிவரை இடம் பெற்றுவரும் வருடாந்த பஜனையில் கலந்து கொள்ளலாம் என்றும், ராமகிருஸ்ண மிசன் வெளியீடுகளின புத்தகங்கள், பஜனைப் பாடல்கள் அடங்கிய ஒலி நாடாக்கள், திருவுருவுப் படங்கள் என்பவற்றை விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் -

சேவாச்சிரம உறுப்பினராக, ஆன்மீக சமூக பணியாளராக இணைய விரும்புபவர்கள் இணையலாம் எனவும் சேவாச்சிரமத்தினர் அறிவித்துள்ளனர்.


# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ச.சர்மிஷன்
முகவரி : அல்வாய்.


## மாநகரசபை பிரிவு பேக்கரிகளில் திடீர் பரிசோதனைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாநகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பேக்கரிகளில் பொது சுகாதார பரிசோதகர்களால் திடீர் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினர் - பேக்கரிகளில் உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்படும்போது இடம் பெற வேண்டிய சுகாதார விதிகள் தொடர்பாகப் பரிசோதனைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

மாநகர சபையால் இவ்வாறான திடீர் சோதனைகள் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாக மாநகரசபை எல்லைக்குட்பட்ட பேக்கரிகளில் சுகாதாரம் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## மஹாராஜியின் உரைகள் விடியோ நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் —

எம்முள்ளேயிருக்கும் உள் அமைதியையும், உண்மையான ஆனந்தத்தையும் ஞானவழிமுறை மூலம் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறை குறித்து மஹாராஜி ஆற்றிய உரைகளின் விடியோ நிகழ்ச்சி நாளை காலை 10.45 மணி முதல் 11.45 வரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## அறநெறி பாடசாலை மாணவர்களின் சமய அறிவுப் போட்டி முடிவுகள்

உடுவில் —

திருஞான சம்பந்தர் குருபூசை தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மருதடி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் வைத்து வலிகாமம் இந்து அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரனால் வழங்கப் படவுள்ளது.

சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு -

பாலர் பிரிவு - தேவாரப் போட்டி

1 ஆம் இடம்- ஜெ.கௌதமி (உடுவில் மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - சி.பிரகாஸ் (உடுவில் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - சு.கோபிகா (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

இசையும் கதையும்

1 ஆம் இடம் -திபியா (சங்குவேலி அ.த.க பாடசாலை), 2 ஆம் இடம்- ரூ.றம்மியா (சங்குவேலி அ.த.க பாடசாலை), 3 ஆம் இடம்-சங்கீதன் (உடுவில் மகளிர் கல்லூரி), செ.சங்கவி (சங்குவேலி அ.த.க பாடசாலை).

ஆரம்பப் பிரிவு- வினா விடைப் போட்டி

1 ஆம் இடம்- அ.அமிர்தவர்சினி (சோதிவேம்படி,பாடசாலை மானிப்பாய்), 2 ஆம் இடம் - பு.இலக்கியா (உடுவில் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்- ஆ.கோகுலன் (சங்குவேலி அ.த.க).

மத்திய பிரிவு- விநாடி வினாப் போட்டி

1 ஆம் இடம்- சி.தமிழினி - (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்), 2 ஆம் இடம் - இ.கவிதா (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்), 3 ஆம் இடம் - சி.பிரதீபா (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப் பாய்).

மேற்பிரிவு - விநாடி வினாப் போட்டி

1 ஆம் இடம் - நா.கார்த்திகா (மெமோறியல் பாடசாலை, மானிப்பாய்), 2 ஆம் இடம் - சி.தர்சிகா (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மானிப்பாய்), 3 ஆம் இடம் - சி.கிருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி). (101)


## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு :

கூப்பனுடன் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## பௌர்ணமி தின வைபவம்

யாழ்ப்பாணம் —

அகில இலங்கைத் திருமறை மன்றம் வைகாசி மாத பௌர்ணமி விழா நாளை காலை 8.30 மணி முதல் இணுவில் காரைக்கால் சிவன் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணியளவில் ஆலய பூசையைத் தொடர்ந்து அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், பன்னிரு திருமுறை நூல்களுக்கு சோடசோபசாரபூசை, சொற் பொழிவு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

# மகிந்தவின் கௌரவமான சமாதானம் காலத்தைக் கடத்தும் ஒரு பொறிமுறை



சுதந்திர இலங்கையில் ஆட்சி செய்த எல்லா ஜனாதிபதிகளும் ஏதோவொரு வகையில் ' சமாதானம்' என்ற சொல்லை உச்சாடனம் செய்து தமது காலத்தைக் கடத்தியதுடன், சூழ்நிலைக் கேற்பவும் தமது வசதிகளுக்கேற்பவும் அந்தச் சொல்லுக்கு புது அர்த்தங்களையும், அடைமொழிகளையும் கொடுத்து வருகின்றார்கள். தமிழ் மக்களின் சமாதானத்துக்காக சிங்களத் தலைவர்களால் தமிழ்த் தலைவர்களுடன் செய்து கொள்ளப் பட்ட பல உடன்படிக்கைகள் சிங்கள மக்களைச் சமாதானப்படுத்துவதற்காகக் கிழித்தெறியப் பட்டமை கடந்த கால வரலாறு.

சமாதானப் புறாவாகத்தோன்றி இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு மிகக் கூடிய சதவீத வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த சந்திரிகா அம்மையார் தமிழ் மக்கள் மீது சமாதானத்துக்கான போர் தொடுத்து சமாதானமுமின்றி, போரில் வெற்றியுமின்றி, கடைசியில் சொந்த முகவரியுமின்றிப் போனமை அண்மைக்கால வரலாறு.

தேர்தல் வெற்றி ஒன்றைமட்டுமே நோக்கமாகக் கொண்டு எல்லாக் கட்சிகளின் கோரிக்கைகளுக்கும் ஆமாம்போட்டு, தமிழர் தரப்பின் இராஜதந்திர காய் நகர்த்தல்களால் ஆட்சிப்பீடம் ஏறிய மகிந்த ராஜபக்ஷவும் 'கௌரவமான சமாதானம்' என்ற பெயரில் காரியம் பார்ப்பது நிகழ்கால வரலாறு. மகிந்த சிந்தனையில் உதிர்த்த இந்தக் கௌரவமான சமாதானம் என்பதன் பொருளை, அவரது தேர்தல் கால வாக்குறுதிகளிலிருந்தும், கடந்த ஆறுமாத ஆட்சிக் காலத்திலும் அவர் மேற்கொண்ட செயற்பாடுகளிலிருந்தும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடியும்.

சிங்களத் தலைவர்களின் 'சமாதானம்' என்ற உச்சாடனத்தை யதார்த்த பூர்வாக நோக்கினால் - தமிழ் மக்களை நோக்கியதாகவே உண்மையில் அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் பிரச்சினைக்குரியவர்களும், அதனால் அமைதியிழந்து அவலப்படுபவர்களும் தமிழ் மக்களே. ஆனால் அவ்வாறில்லாமல் அவர்களின் சமாதான உச்சாடனமானது - சர்வதேசத்தையும், சாதாரண அப்பாவிச் சிங்கள மக்களையும் நோக்கியே போலித்தனமாக அமைந்துள்ளது. இதற்குப் பல காரணிகள் இருக்கக்கூடும்.

தமிழ் மக்களை நோக்கியதாக சிங்களத் தலைவர்களது சமாதான உச்சாடனம் அமையாததற்கான காரணிகளில் ஒன்று, சிங்களத் தலைவர்கள் கூறும் சமாதானம் எப்படியானது என்பதைக் கடந்த காலக் கசப்பான அனுபவங்களினூடாக தமிழ் மக்கள் அறிந்து கொண்டதால் அதை நம்பத்தயாராக இல்லை.

ஒன்று சமாதானம் தொடர்பான சற்றுக் கூடுதலாக தமிழ் மக்களால் நம்பிக்கை வைக்கப்பட்ட சந்திரிகா அம்மையாரின் செயற்பாடுகள் தமிழ் மக்களிடமிருந்த கொஞ்ச நம்பிக்கையையும் இல்லாமல் செய்தமை. இரண்டாவது பதவியைத் தக்கவைப்பதற்கு தமிழ் மக்களின் தயவு இனிமேல் சிங்களத் தலைவர்களுக்குக் கிடையாது என்ற நிலை உருவாகியுள்ளமை. இதனால் தமிழர் படும் அவலங்கள் சிங்களத் தலைவர்களை நேரடியாகப் பாதிப்பதில்லை.

ஆனால், சாதாரண சிங்கள மக்களை நோக்கி அவர்கள் சமாதானத்தை அடிக்கடி உச்சரிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் யுத்தத்தால் உயிரிழப்புகளையும், பொருளாதாரப் பாதிப்புகளையும், இடப்பெயர்வுகளையும் சந்திப்பவர்கள் சாதாரண மக்களாவர். அவர்களே சிங்களக் கட்சிகளின் வாக்குவங்கிகளை நிரப்புபவர்களாகவும் இருக்கின்றனர்.

அதேவேளை, சர்வதேசத்தை நோக்கியும் இன்னும் உரக்க சமாதானத்தைக் கூறவேண்டியுள்ளது. ஏனெனில் ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைப்பதற்குத் தேவையான வெளிநாட்டு உதவிகளைப் பெறவும், முதலீடுகள்ளக் கவரவும், நிதிச் சந்தையைப் பாதுகாப்பதற்கும் ஆட்சியாளர்களுக்கு இது மிக அவசியமாகவுள்ளது. மறுபுறத்தில் சர்வதேச நாடுகளுக்கும் அவர்களது சொந்த நலன்களை மறைமுகமாகப் பேணிக்கொள்வதற்கும் 'சமாதானம்' போன்ற ஏதோவொரு முகமூடி அவசியப்படுகிறது. ஏனெனில் புதிய சர்வதேச ஒழுங்கில் இன்று வல்லரசுகள் தங்களின் ஆதிக்க நலன்களைப் பேணுவதற்காக சமாதானம், பயங்கரவாதம், மனிதஉரிமைகள் போன்ற முகமூடிகளை அணிந்து கொண்டு தலையீடு செய்வதை நாம் காணலாம்.

இந்தப் பின்னணியிலேயே நாம் மகிந்தவின் கௌரவமான சமாதானத்தை நோக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் போது சிங்களக் கடும்போக்கு இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து தமிழ் மக்களையும், புரிந்துணர்வு உடன்பாட்டையும், சமாதான நடைமுறைகளையும் பாதிக்கக் கூடிய அம்சங்களை ஏற்று உடன்படிக்கைகள் மேற்கொண்டார். ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்ற இறுக்கமான நிலையை 'மகிந்தவின் சிந்தனை' உள்ளடக்கியதுடன் சமாதான நடைமுறையைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை மாற்றியமைப்பேன், நோர்வேயை வெளியேற்றுவேன் என்ற சுலோகங்களை முன்வைத்து பிரசாரத்தில் ஈடுபட்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகவும் கூர்ப்படைந்து நிற்கும் இந்தக் காலப்பகுதியில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வுக்கு முயலுதல் என்ற ஒஸ்லோ பிரகடனத்தின் பின்னரும், எதிர்த்தரப்பு வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க 'ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு' என்பதை முன்வைத்து பிரசாரம் மேற்கொண்ட சூழ்நிலையிலும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்ற மிகவும் பிற்போக்கான, காலங்கடந்த கொள்கையைத் தீவிரமாகப் பிரசாரம் செய்ததுடன் இன்றுவரையும் அதனை மகிந்த இறுகப்பிடித்திருப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

முப்படைகள் உட்பட ஓர் அரசுக்கான சகல கட்டுமானங்களுடன் பரந்த ஓர் ஆட்சிப் புலத்தை வைத்திருக்கும் உலகின் முதன்மையான விடுதலை அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் தமது தனி நாட்டுக் கோரிக்கையை இதுவரை கைவிடவில்லை என்பதுடன், அதற்கு இணையான ஓர் ஆட்சிமுறையைப் பரிசீலிப்பதற்குத் தயார் என்று சொல்லியிருப்பதானது - உயர்ந்தபட்ச கூட்டாட்சி முறையைக் கருதியதாகவே அமையும். இத்தகைய ஒரு நிலையில் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்று மகிந்த கூறுவது புரியாத் தனத்தினாலோ அல்லது பேரம் பேசுவதற்காகவோ அல்ல. உண்மையில் பேச்சுவார்த்தை மூலம் சமாதான வழியில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க மகிந்தவும், அவரது கூட்டாளிகளும் தயாரில்லை என்பதேயாகும்.

'பிரிக்க முடியாத இலங்கைக்குள் இறுதி அரசியல் தீர்வு' என்ற தலைப்பில் சர்வகட்சி மாநாட்டு அழைப்பையே நிராகரிக்கும் கூட்டாளிகளும், அவர்களுக்குப் பயந்து தலைப்பையே மாற்றும் மகிந்தவும் நீதியான அரசியல் தீர்வை முன்வைப்பார்களா?

அவ்வாறாயின் மகிந்தவின் கௌரவமான சமாதானம் எதைக் குறிக்கிறது? காலங்கடத்துதல், அந்தக் காலத்தில் தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்தல், சர்வதேச ரீதியாகத் தனிமைப்படுத்தல், முடிந்தால் சர்வதேச உதவிகளுடன் விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை அழித்தல், அதன் பின் நிலைமைக்கேற்ப தாம் விரும்பும் ஒரு தீர்வைத் திணித்தல் அல்லது எதுவுமே வழங்காத சரணாகதி நிலையைத் தோற்றுவித்தல் என்ற முன்னைய சிங்களத் தலைவர்களது கொள்கையே மகிந்தவின் கௌரவமான சமாதானத்திலும் பொதிந்துள்ள பொருளாகும் என்பதை அவரது ஆறுமாத ஆட்சிக்கால செயற்பாடுகள் மூலம் இலகுவாக முடிவு செய்யலாம்.

'காலங் கடத்தல்' என்பது எரிகின்ற பிரச்சினைகளின் வேகத்தை மழுங்கச் செய்து அதனை காலப் போக்கில் இல்லாமல் செய்வதற்காக ஆட்சியாளர்களால் பின்பற்றப்படும் ஒரு பொதுவான உத்தி. விசாரணைக்குழுக்கள், ஆலோசனைச் சபைகள், சர்வகட்சி மாநாடுகள், பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் என இது களநிலைமைக் கேற்ப வேறுபட்டமையும். தமிழர் பிரச்சினை தொடர்பாக ஜே.ஆரினால் தொடக்கி வைக்கப்பட்ட இந்தக் காலங்கடத்தும் உத்தியை இப்போது மகிந்த கையிலெடுத்துள்ளார். இனி இவரது காலத்திலும் சர்வகட்சி மாநாடுகள், அரசியல் ஆலோசனைச் சபைகள், பேச்சுவார்த்தை அழைப்புகள் எனக் காலத்தை மட்டுமல்ல, தமிழர் வாழ்வுக்கான் இருப்பையும் அழிப்பதற்கான முயற்சிகள் தொடரும். அதுவும் முன்னைய பேச்சுக்கள், இணக்கப் பாடுகள் எல்லாவற்றையும் கிடப்பில் போட்டு விட்டு, புதிதாகவே எல்லாவற்றையும் தொடங்குவதற்கு அழைப்பு விடுக்கிறார் மகிந்த.

இந்த உத்தியைப் பயன்படுத்திக் கடந்த 28 ஆண்டுகளில் பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் எல்லோரும் தமது ஆட்சிக் காலத்தைக் கடத்திவிட்டார்கள். அதேபோலவே மகிந்தவும் இந்தப் பதவிக் காலத்தை ஓட்டுவதற்கு மட்டுமல்ல, அடுத்த பதவிக் காலத்தையும் தக்க வைப்பதற்கு அடித்தளம் போடுகிறார். ஆனால், இதற்கு விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் எவ்வளவு தூரம் இடம் கொடுப்பார்கள் என்பது தான் இன்றுள்ள பெறுமதியான கேள்வி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ,அரசியல் மற்றும் பொருளாதாரப் பலத்தைச் சிதைப்பதன் மூலம் தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்துவது மகிந்தவின் இன்னொரு உத்தியாகும். ஏனெனில் விடுதலைப் புலிகளின் பலம் தான் இன்று இலங்கையின் வரலாற்றை நிர்ணயிக்கிறது. இலங்கை அரசு மட்டுமல்ல, சர்வதேச ஆதிக்கச் சக்திகள் கூட தாம் விரும்பியவற்றைச் சாதிக்க முடியாதிருப்பதற்கு விடுதலைப் புலிகள் பெற்றிருக்கும் பலமே அடிப்படைக் காரணியாகவுள்ளது. பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள், சர்வதேச இராஜதந்திர முயற்சிகள் யாவுமே இந்தப் பலத்தின் விளைவுகளே.எனவே தான் இந்தப் பலத்தைச் சிதைப்பதில் ஆட்சியாளர்கள் முழுக் கவனத்தையும் செலுத்துகிறார்கள். இதற்கு வெளிநாட்டுச் சக்திகள் பலவும் உதவுகின்றன. உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவால் அரங்கேற்றப்பட்ட சமாதான முன்னெடுப்புகள் கூட புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கான ஒரு பொறிதான். பல விடுதலை அமைப்புகள் சமாதான காலத்திலேயே அதிகளவில் கருவறுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் யுத்தத்தால் வெல்ல முடியாத விடுதலைப் புலிகளை, சமாதானம் பேசி வலுவிழக்கச் செய்வதே ரணிலினதும், அவரது சர்வதேச கூட்டாளிகளினதும் நோக்கமாக இருந்தது. அவர்களின் பருப்பு விடுதலைப் புலிகளிடம் வேகவில்லை என்பதில் சிங்கள ஆட்சியாளருக்கு மட்டுமல்ல, சர்வதேச ஆதிக்கச் சக்திகளுக்கும் ஏமாற்றம் தான். எனினும் மனஞ்சலிக்காத சிங்களத் தலைவர் வரிசையில் இப்போது மகிந்தவும் வேதாளம் சொல்லும் கதைபோல மீண்டும் அதே மரத்தில் ஏறுகிறார். துணை ஆயுதக் குழுக்கள், ஆழ ஊடுருவும் படையணிகள், இராணுவத் தளபாடக் கொள்வனவு, ஆட்சேர்ப்பு, வெளிநாட்டுப் பயிற்சிகள் யாவுமே புலிகளைப் பலவீனப்படுத்தும் இராணுவ உத்திகளே.



மறுபுறத்தில் நடுநிலை ஊடகங்கள்,குறிப்பாகத் தமிழர் தரப்பு நியாயங்களையும், உண்மையான களநிலைமைகளையும் எடுத்துக் கூறும் ஊடகங்களும், ஊடகவியலாளரும் அரச பயங்கரவாதத்தின் மூலம் அச்சுறுத்தப் படுகின்றனர். தமிழ்ப் பத்திரிகைப் பணிமனைகள் மீதான தாக்குதல்கள், தமிழ் ஊடகவியலாளரைக் கொலை செய்தல் என்பவற்றுடன் நடுநிலையான ஒரு சில சிங்கள ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர் மீதும் புலிச்சாயம் பூசுவதும் இதில் அடங்கும்.

அதேவேளை, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தவும், தனிமைப்படுத்துவதற்குமான உத்தியின் மற்றொரு கருவியாக ஊடகங்கள் கையாளப்படுகின்றன. இது இரு வழிகளில் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்று அரசு தனக்குச் சொந்தமான ஊடகங்களையும், சார்பான ஊடகங்களையும் உச்சளவில் பயன்படுத்திக்கொள்வது. மற்றது உண்மை நிலைமைகளை வெளிக்கொணரும் நடுநிலை ஊடகங்களை அச்சுறுத்திப் பணிய வைப்பது. இன்று அரச ஊடகங்களும், பேரினவாத சிங்கள, ஆங்கில ஊடகங்களும் போட்டி போட்டுக் கொண்டு புலி எதிர்ப்புப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் உண்மை நிலைமைகள் சாதாரண சிங்கள மக்களைச் சென்றடையாது தடுக்கப் படும் அதேவேளை, விடுதலைப் புலிகள் ஒரு பயங்கர வாதக்குழு என்ற போலியான தோற்றப்பாடும் உருவாக்கப்படுகின்றது.

அத்துடன் இத்தகைய இனவாத ஊடகங்களில் பணிபுரியும் சிலர் சர்வதேச ஊடகங்களுக்கான செய்தி முகவர்களாகவும் பணியாற்றுவதால், இவர்கள் வழங்கும் கயிறுகளை விழுங்கிக் கொண்டு, அந்த சர்வதேச ஊடகங்களும் தவறான தகவல்களை வெளியிட்டு வருகின்றன. மேலும் இத்தகைய புலி எதிர்ப்புப் பிரசாரங்களுக்கு சிங்களப் புத்தி ஜீவிகள், நடுநிலையாளராக நடிக்கும் அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியோருடன் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட உதிரிகளும், குழுக்களும் திட்டமிட்டு பயன்படுத்தப்படுகிறது.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துதல் மற்றும் தனிமைப்படுத்துதல் என்ற உத்தியின் இன்னொரு செயற்பாட்டு வடிவம் சர்வதேச களநிலைமைகளை மகிந்த தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாகும். நீண்டகாலமாகவே இந்த உத்தியைப் பயன்படுத்தி இலங்கை அரசு தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பாகவும்,விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் தவறான ஒரு விம்பத்தை சர்வதேசத்தில் உருவாக்கி, அதனைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கு கடும் பிரயத்தனம் எடுத்து வந்ததுடன். அதில் கணிசமானளவு வெற்றியையும் அது பெற்றிருந்தது. ஆனால், சமாதான காலம் என்று சொல்லப்பட்ட கடந்த நான்கு ஆண்டு காலத்தில் தங்களைப் பற்றிய தவறான விம்பத்தை உடைப்பதில் விடுதலைப் புலிகள் கணிசமான வெற்றியைப் பெற்றிருந்தனர் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். எனினும் புதிய சர்வதேச ஒழுங்கு, அதன் வழியிலான ஏகாதிபத்திய நலன்கள்,அரசு என்ற அந்தஸ்து,பிறநாட்டுத் தலைவர்களுடன் அந்த நாடுகளில் வாழும் சிங்கள உயர் குழாம் கொண்டிருக்கும் நெருக்கமான உறவுகள் போன்றன இலங்கை அரசுக்கு சர்வதேசத்தில் இருக்கக் கூடிய சாதகமான காரணிகளாகும்.

இவற்றைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை சர்வதேசத்திலிருந்து தனிமைப் படுத்துவதற்கும், அவர்களின் வெளிநாட்டு நிதி மூலங்களை முடக்குவதற்கும், ஆயுத வழங்கல்களைத் தடுப்பதற்கும் மகிந்த அரசு கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றது. இதன் ஒரு வெளிப்பாடு தான் ஐரோப்பிய ஒன்றியத்தின் அண்மைய தடையறிக்கை.உண்மையில் இது மகிந்தவின் சாதனை அல்ல. ரணில் விக்கிரமசிங்கவால் முன்னர் விதைக்கப்பட்ட சர்வதேச வலைப் பின்னலின் முக்கிய விளைவொன்றை மகிந்த அறுவடை செய்திருக்கிறார் என்பதே உண்மை நிலைமையாகும்.

முடிவாக,மகிந்த ராஜபக்ஷ நாட்டை இருபத்தியோராம் நூற்றாண்டுக்குரியதாக மாற்றுவதற்குப் பதிலாக 56ஆம் ஆண்டுக்கு பின்னோக்கிக் கொண்டு செல்ல முயற்சிக்கிறார் என்ற ஒரு பொதுவான கருத்து அரசியல் ஆய்வாளர்களால் முன்வைக் கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி 56 ஆம் ஆண்டுக்குப் பின் வந்த சிங்களத் தலைவர்கள் தமிழரின் வாழ்வுரிமையைப் பறிப்பதற்குக் கையாண்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர பரீட்சிக்க முற்படுகிறார் என்பதையும் அவரது ஒவ்வொரு செயற்பாடுகளும் எடுத்துக் காட்டுகிறது.

இதன் மூலம் அவர் இலங்கை வரலாற்றில் பௌத்த சிங்கள இனத்தின் சிறந்த மீட்பனாக இடம் பிடிக்க விரும்புகிறார். இந்த நோக்கத்தை உள்வாங்கியதாகவே அவரது கௌரவ சமாதானம் அமைந்துள்ளது. இந்தவகையில் பத்திரிகைகளில் வரும் மணமக்கள் விளம்பரத்திலுள்ள 'கௌரவ' என்ற சொல்லுக்கு ஒரு மறைபொருள் இருப்பது போல, மகிந்தவின் 'கௌரவ சமாதானத்தின்' மறைபொருள் என்பது தமிழரின் சரணாகதி என்பதாகவே கருதப்பட முடியும்.

அருந்தன்

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
ஆற்றாரும் ஆற்றி அடுப இடன் அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்

- திருக்குறள்

## நமது நோக்கு

# ஆப்பிழுத்த நிலையிலே அரசு!

ஒஸ்லோவில் நடைபெறும் சந்திப்பு தற்போதைய நெருக்கடி நிலையைத் தவிர்க்கும் எனத் தாம் நம்பவில்லை என நோர்வே புறப்படுவதற்கு முன்னர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் - ஒஸ்லோ பயணம் என்பது முறுகல் நிலைக்குத் தீர்வைத் தராது என்பது வெளிப்படையாகியிருக்கிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அங்கத்துவம் நெருக்கடிக்குள்ளாகியிருப்பது - விடுதலைப் புலிகளின் கடல் இறைமை என்பன இந்தப் பேச்சுக்களில் புலிகள் தரப்பில் முக்கியமாக ஆராயப்பட்டிருக்கின்றன.

அதேவேளை, அரசுத்தரப்போ ஒஸ்லோ பயணத்தை புலிகளுடனான ஒரு பேச்சுக்களமாகப் பிரச்சாரப்படுத்த எத்தனித்து தோல்வி கண்டிருக்கிறது.

அரச உயர் மட்டத்திலிருந்து எவரும் செல்லாமல் பாலித கொகன்ன தலைமையில் சென்ற அரச அதிகாரிகள் குழு - புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு எத்தனித்ததாகவும் அது நிராகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இரு தரப்பு சந்திப்புக்காக தாம் செல்லவில்லை என்பதைப் புலிகள் முன்னரே அறிவித்திருந்தனர். நோர்வேயுடனான சந்திப்புக்கே செல்வதாக அவர்கள் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் அரச தரப்பு சந்திப்புக்கு நோர்வே ஒழுங்கு செய்தபோதும் அந்த முயற்சி தோல்வி கண்டிருக்கிறது.

ஜெனிவாவில் அரச - புலிகள் உயர்மட்டக் குழுக்கள் சந்தித்து நடத்திய பேச்சுக்கள் வெறும் புஷ்வாணமாகிப் போனது நாம் அறிந்த வரலாறு.

ஜெனிவாவில் இணக்கம் கண்டதை நடைமுறைப்படுத்தாத அரசாங்கத்தில் அதிகாரம் இல்லாத அதிகாரிகள் குழுவுடன் பேச்சு நடத்துவது எந்தப் பயனுமற்றதென்பது வெளிப்படை.

கடந்த காலத்தில் அரசு நடந்து கொண்ட முறைதான் இவ்வாறு புலிகள் நடந்துகொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜெனிவா பேச்சுக்களுக்குப் பின்னர் அரச படைகளும், துணை ஆயுதக்குழுக்களும் நடத்திய படுகொலைகளும், தாக்குதல்களும், அட்டூழியங்களும்தான் எத்தனை? எத்தனை?

இனவாதப் படுகொலைகளும், இராணுவ நெருக்குவாரங்களும் தமிழ்மக்களின் அன்றாட வாழ்வாகிவிட்ட நிலையில் - ஜெனிவா இணக்கப்பாட்டை அமுல்படுத்த முன்வராத அரசுடன் புலிகள் எப்படித்தான் பேசுவது?

எந்தவொரு பேச்சுமே இணக்கப்பாட்டை எட்டுவதாக மட்டும் அமையாமல் - அதை நடைமுறைப்படுத்துவதாகவும் அமைவதுதான் முக்கியம். அந்த வகையில் இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த விரும்பாத தரப்புடன் - புலிகள் பேச இணங்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

அந்த வகையில் ஒஸ்லோவைப் பேச்சுக்களமாக்க முயன்ற நோர்வேயும், இலங்கை அரசும் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டதென்றே கூற வேண்டும்.

கண்காணிப்புக்குழுவின் எதிர்காலம் என்பது பேச்சுப் பொருளாக அமைந்த போதும் அதையே அரசியலாக்க இலங்கை அரசு முற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் இன்று சர்வதேச சமூகத்துக்கு - நாடு யுத்தத்தை நோக்கிச் செல்லவில்லை என்று நம்பவைக்க வேண்டிய கட்டாயத்துக்குள் சிக்கிப் போயிருக்கிறது.


புலிகளைத் தடைசெய்யப் பிரசாரம் செய்யப்போய் தானும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் அரசு - ஒரு புறத்தில் தமிழினப் படுகொலைகளை நடத்திக் கொண்டே மறுபுறத்தில் சமாதானம் குறித்துப் பிதற்றுகிறது.

ஆனால், அரசின் இந்தப் பிதற்றலும், பித்தலாட்டமும் புலிகளிடம் இனிமேலும் வாய்க்காது என்பது ஒஸ்லோவில் உறுதியாகியிருக்கிறது.

ஒஸ்லோ சந்திப்பை தனக்குச் சாதகமாக்க எத்தனித்த அரசுக்கு இது ஒரு பின்னடைவாகவே இருக்கும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# கோயில்களுக்கு காணிகளை வழங்காது வறிய மக்களுக்கு வழங்குமாறு வலியுறுத்து

சங்கானை—

கோயில்களுக்கு காணிகளை நன்கொடையாக வழங்க விரும்புவோர் அவற்றை சமூகத்திலுள்ள வறிய, நலிவுற்ற மக்களுக்கு பயன்படும் வகையிலும் மற்றும் பொதுச் சேவைகளுக்குப் பயன்படும் வகையிலும் வழங்குவதுடன், இது விடயத்தில் ஆலய நிர்வாக சபையினர் செயற்பட்டு கூடுதலாகவுள்ள ஆலயக் காணிகளை மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற திட்டங்களை வகுத்துச் செயலாற்ற வேண்டுமெனவும் வலி.மேற்குப் பிரதேச செயலாளரும், கலாசார பேரவைத் தலைவருமாகிய சி.ஏ.மோகன்றாஸ் தலைமையிலான கலாசாரப் பேரவையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வலி.மேற்குப் பகுதியிலுள்ள பெரும்பாலான ஆலயங்களுக்குச் சொந்தமாகவுள்ள காணிகளை முன்னோர் நன்கொடையாக வழங்கியுள்ளனர். இவ்வாறு வழங்கப்பட்ட பெரும்பாலான காணிகள் பொதுமக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாதவாறு வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகளைப் பயன்படுத்துவதும் இல்லை, ஆலய நிர்வாகத்தினரும் கடைசிவரை இந்தக் காணிகளை விற்கவோ, பிறதேவைகளுக்குப் பயன்படுத்தவோ முடியாத நிலையிலுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த மாதம் 31 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு வலி.மேற்குப் பிரதேசசபையின் கலாசாரப் பேரவை நிர்வாக சபைக் கூட்டத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் ஆராயப்பட்ட போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. (48)

# பாசையூர் அந்தோனியார் நவநாள் கொண்டாட்டம்

கொக்குவில்—

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி பிரசங்கம், வழிபாடு, திருப்பலி, ஆசீர்வாதம் என்பன இடம்பெற்று வருகிறது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும், சுற்றுப் பிரகாரமும் நடைபெறும்.

13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு யாழ் ஆயர் மேதகு சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் பாடல், கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். மாலை 5.30 மணிக்கு திருச் சொரூப பவனி ஆரம்பமாகி இரவு 7.30 மணிக்குத் திருச்சொரூப ஆசீருடன் நவநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும். (206)

# கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்!

காரைநகர்—

கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற சிறுமி தவறுதலாக கிணற்றில் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

காரைநகர் மருதடியைச் சேர்ந்த மகாலிங்கம் கஸ்தூரி (வயது11) என்ற சிறுமியே நேற்று மாலை தண்ணீர் அள்ளச் சென்றவேளை கிணற்றினுள் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

குறித்த கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றவர்கள் சிறுமியின் சடலம் மிதப்பதைக் கண்டு அயலவர்களின் உதவியுடன் சடலத்தை மீட்டனர். சடலம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (52)

# சிலிண்டர் வெடித்து இருவர் உயிரிழப்பு

கொழும்பு—

கொட்டாஞ்சேனை- சங்கமித்தை மாவத்தையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் ஹோட்டலின் ஊழியர்கள் இருவர் உயிரிழந்ததுடன் ஹொட்டலும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

ஹோட்டலின் ஊழியர் ஒருவர் எரிவாயு சிலிண்டரை மாற்றிக்கொண்டிருக்கும் போது எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறியதாக கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர். உதயன் (வய்து 32) , மணிமாறன் (வயது 19) ஆகிய இருவருமே தீ விபத்தில் உயிரிழந்தனர். எரிவாயு சிலிண்டர் வெடிக்கும் போது கடையில் ஆறு பேர் இருந்துள்ளனர்.

மேல்மாடியில் இருந்த இரு ஊழியர்களில் ஒருவர் கீழே குதித்து உயிர் தப்பியுள்ளார். மற்றவர் மேல் மாடியில் இருந்த போதே தீயில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்—

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்துக்கு நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# போத்தல் கள் அடைப்பு தொழிற்சாலை திறப்புவிழா

அச்சுவேலி—

அச்சுவேலி பனை - தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் போத்தல் கள் அடைப்புத் தொழிற்சாலை திறப்புவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி சங்கத் தலைவர் செ.காந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அரசாங்க அதிபர் கே.கணேஸ், சிறப்பு விருந்தினர்களாக ஜி.ரி.இசற் நிறுவனத்தின் முதன்மை ஆலோசகர் வூல்ப் காங் கரட்வா, யாழ். மாவட்ட பனை-தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஜயாத்துரை, கோப்பாய் பிரதேச செயலர் சி.ர.மோகன்ராஜ், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (கணக்காய்வு) த.கந்தசாமி, தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் அ.சாந்தசீலன், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் சி.நிமலினி, வலி.கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் த.நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# நினைவுச் சுவடுகள் நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்—

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் ஆதரவுடன் கவிஞர் சோ.பத்மநாதனின் நினைவுச்சுவடுகள் நூல் அறிமுகம் நாளை காலை 10 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ.சதானந்தன் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

ந.சத்தியபாலன், பா.மகாலிங்கசிவம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.